# சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 23வது கூட்டறிக்கை 2020.01.07

சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 23வது அமர்வு 2020.01.07 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணிக்கு சம்மாந்துறை பிரதேச சபையின் சபா மண்டபத்தில் தேசிய கீதம் மற்றும் இறை சிந்தனையுடன் கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது.

**சமூகமளித்த கௌரவ உறுப்பினர்கள்**

| | | | |
|---|---|---|---|
| 01. | ஜனாப்.ஏ.எம்.எம். நௌசாட் | கௌரவ தவிசாளர் | அ.இ.ம.கா |
| 02. | ஜனாப்.ஐ.எல்.நஜீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 03. | ஜனாப்.எஸ்.எம்.எம்.முஸ்தபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 04. | ஜனாப்.ஏ.அச்சி முஹம்மட் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 05. | ஜனாப்.யூ.எல்.அஸ்வர் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 06. | திருமதி.ஆர்.வளர்மதி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 07. | திரு.என்.கோவிந்த சாமி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 08. | ஜனாப்.ஏ.சி.முஹம்மட் சஹீல் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 09. | ஜனாப்.எம்.ரீ.பௌசுள்ளாஹ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 10. | ஜனாப்.ஐ.எல்.எம்.மாஹிர் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 11. | ஜனாப்.ஏ.எம்.எம்.றியாஸ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 12. | ஜனாப்.ஏ.எல்.எம்.ஜிப்ரி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 13. | ஜனாப்.எஸ்.நளீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 14. | ஜனாப்.ஏ.யூசுப் லெவ்வை | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 15. | திருமதி.கே.எம்.இன்பவதி | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 16. | திருமதி.எம்.எஸ்.சரீபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 17. | திருமதி.எஸ்.எம்.சித்தி நிலுவ்பா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 18. | திருமதி.கே.எல்.சிஹாமா | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 19. | ஜனாப்.வை.பீ.எம்.முஸம்மில் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |

**சமூகமளிக்காத கௌரவ உறுப்பினர்கள்**

| | | | |
|---|---|---|---|
| 01. | திரு.வீ.ஜெயச்சந்திரன் | கௌரவ உப தவிசாளர் | ஸ்ரீ.சு.க |

**சமூகமளித்த உத்தியோகத்தர்கள்**

| | | |
|---|---|---|
| 01. | ஜனாப்.எம்.ஏ.கே.முஹம்மட் | செயலாளர் |
| 02. | செல்வி.ஏ.பீ.ஏ.ஸஹானா | அலுவலக உதவியாளர் |

**கௌரவ தவிசாளர் ஏ.எம்.எம். நௌசாட்**

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம். எல்லாப்புகழும் இறைவனுக்கே, எல்லோரையும் 04வது சபையின் 23வது அமர்வுக்கு வரவேற்றவனாக,

கௌரவ உப தவிசாளர் வீ.ஜெயச்சந்திரன் அவர்கள் இன்றைய சபை அமர்விற்கு வருகை தர முடியாதென்று அறிவித்தல் விடுத்திருக்கின்றார். அவருக்கு விடுமுறை வழங்க சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என். கோவிந்தசாமி |

இவ் அமர்வின் முதல் அம்சமாக கடந்த கூட்டறிக்கை சமர்ப்பித்தலும் அங்கீகாரம் பெறலும். இக் கூட்டறிக்கையில் ஏதாவது திருத்தங்கள் இல்லாவிடில் ஒருவர் ஆமோதிக்கலாம்.

**தீர்மானம் - 04/23/01**

சென்ற மாதக் கூட்டறிக்கையினை ஏற்றுக் கொள்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

கூட்ட ஆரம்பத்தில் நீங்கள் அவதானித்திருப்பீர்கள் நான் 4வது சபையின் 23வது அமர்வு என்று கூறியதற்கு காரணம் சென்ற வாரம் மாவட்ட உதவி ஆணையாளர், தவிசாளர், செயலாளர்கள், நிதி உதவியாளர்கள் அனைவரையும் அழைத்து கூட்ட நடவடிக்கைகள், விதி முறைகள் பற்றி கூறிய போது நாம் கூட்டங்களில் தீர்மானம் ஒன்று, தீரமானம் இரண்டு என்று எடுத்தால் இது எத்தனையாவது சபையின் எத்தனையாவது கூட்டத்தின் எத்தனையாவது முடிவு என்று ஒரு முறை இருக்க வேண்டும். எனவே இது சம்மாந்துறை பிரதேச சபையின் 4 வது சபை ஆகும். முதலாம் சபை மர்ஹீம் UL.முகைடீன் அவர்களின் தலைமையில் உருவாக்கப்பட்டது. 2வது சபை இன்றைய பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ M.I.M.மன்சூர் அவர்களின் தலைமையில் உருவான சபை. 3வது சபை என் தலமையில் உருவானது. இது 4வது சபை ஆகும்.

தவிசாளர் விசேட அறிவித்தல்கள் கூறும் போது கௌரவ உறுப்பினர்கள் இடையில் பேச முடியாது. ஆனால் சபையின் அங்கீகாரமான விடயங்கள் வரும் போது கருத்துக்களைக் கூறலாம். அதன் பின்னர் ஏனைய விடயங்களில் கௌரவ உறுப்பினர்கள் உங்களின் கருத்துக்களை சுருக்கமாக கூறி குறிப்புக்களை சுருக்கமாக எழுதி கௌரவ உறுப்பினர்களுக்கு தேவைப்பட்டால் ஒலி நாடாக்களை பெற்றுக் கொடுக்கும் படி எங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆனால் நாம் பேசுவது எல்லாம் பதிவு செய்ய வேண்டும் என்று வழமை போல் கொண்டு செல்லலாம். நான் கூறுவது என்னவென்றால் பேசும் போது சுருக்கமாக நாம் கூறும் கருத்தை முன் வைத்து இன்னொரு நபரை சுட்டிக் காட்டாமல் சபையில் இல்லாதவர்களைப் பற்றி பேசாமல் கட்டுப்பாட்டுக்குள் பேசுவோமானால் ஆவணப்படுத்தப்படும் போது அது ஒரு நாகரீகமானதாக இருக்கும் என்று கூறியவனாக,

சென்ற சபையில் இருந்து இன்று வரை பல முக்கியமான நிகழ்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. முதலாவது இந்த சபையின் Finance and Policy Making குழுக் கூட்டம் கூடியது. அதன் குறிப்புகள் உங்களுக்கு தரப்பட்டுள்ளது. அக் கூட்டம் ஒரு ஆக்கபூர்வமான கூட்டமாக இருந்தது. ஏறத்தாள 20 பேர் அழைக்கப்பட்டு 7 பேர் வந்திருந்தார்கள். அக் கூட்டத்திற்கு வருகை தந்தவர்கள் முன்வைத்த கருத்துக்கள் உள்வாங்கப்பட்டு உங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மற்றய குழுக்கள் இம் மாதத்துக்குள் கூட்டப்படுவதோடு நமது உறுப்பினர்களும் ஆர்வத்தோடு பங்கேற்று ஆக்கபூர்வமான கூட்டங்களாக மாற்றுவதற்கு உங்களின் ஆதரவினை நாடுகின்றேன். அடுத்த விடயம் ஒக்டோபர் மாதம் நமது வாசிப்பு மாதம் அதில் அமீர் அலி நூலகம் ஆரம்பித்த காலப்பகுதியில் இருந்து பரிசு பெற்று வருகின்றோம். இம் முறையும் 2019ஆம் ஆண்டிற்குரிய சிறந்த வாசிப்பு மாத பரிசும் சம்மாந்துறை அமீர் அலி நூலகத்திற்கு கிடைத்ததோடு காப்பகப் பரிசும் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ளது. இதற்கு பங்களித்த சபையின் செயலாளர், நூலகங்களின் பொறுப்பு உத்தியோகத்தர்கள் குழுவின் அங்கத்தவர்கள் எல்லோருக்கும் நாம் வாழ்த்துக்களை தெரிவித்து அத்துடன் சபையின் வருடாந்த ஒன்று கூடல் நடைபெற்றது. அதில் கௌரவ உறுப்பினர்கள் பங்கு பற்றி இருந்தீர்கள் அதற்கு நான் நன்றி கூறியவனாக,

இம் மாதத்தில் வாழ்க்கையின் முதல் நாள் சம்மாந்துறை பிரதேச சபையின் தவிசாளராக கல்முனை உயர் நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டிருந்தேன். ஏனென்றால் K.L.நளீம் என்ற உத்தியோகத்தர் சபைக்கு எதிராக அவரின் பாதையில் தேங்கி நிற்கும் நீரை அகற்றுவதற்கு முயற்சி எடுக்கவில்லை என்று ஒரு வழக்கு தாக்கல் செய்திருந்தார். அதில் நான் சந்தோசமடைந்தது என்னவென்றால் அவ் வழக்கில் சபையின் சார்பில் அப்பாஸ் சட்டத்தரனியை நியமித்திருந்தோம். அதற்கு அப்பால் நீதிபதியுடன் நான் நேரடியாக அவரின் அனுமதியோடு சபை எடுத்த முயற்சிகளை பற்றி எடுத்துக் கூறி ஏன் எங்களுக்கு செய்யமுடியவில்லை என்ற காரனங்களை கூறியதும் அந்த வழக்கு திசைமாறியது. நீதிபதிக்கோ விளங்கியது சட்டத்திற்கு

இதை செய்வதற்கு இடமில்லை. இது சட்ட விரோதமாக பங்கிடப்பட்டு மதில்கள் கட்டப்பட்டு வீடுகள் கட்டப்பட்டு நீர் ஓடுவதற்கு அவர்களோ வழிகள் வைக்காமல் நீரை தேங்க வைத்ததால் அதை சபையினால் தீர்க்க முடியாது. அத்துடன் வழக்கு தாக்கல் செய்தவரிடம் இருந்தது ஆட்சி உறுதி ஆகும். பேமிட் காணியை பிரித்து ஆட்சி உறுதியாக மாற்ற முடியாது. நீதிபதி கூறினார் அரச காணிகளுக்கு ஆட்சி உறுதிகள் எழுதப்படுவது சட்டவிரோதமான செயல்கள். இவைகள் நீதிமன்றத்திற்கு வரும்போது இதை எழுதிய நொத்தாரிசுகள், சட்டத்தரணிகளுக்கும் எதிராக அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவரும் என்ற தொனியில் கூறினார். இவ்வாறு எல்லா முயற்சிகளையும் எடுத்த சபைக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்வது எனக்கு பொருந்திக் கொள்ள முடியாது என்றும் கூறினார். இது ஒரு மகிழ்ச்சியான விடயமாக இருந்தது.

அம் - 8ம் குறுக்கு வீதிக்கு வடிகான், அலவக்கரையில் ஒரு Drainage போன்ற 2 வேலைகளுக்கு உள்ளூராட்சி அமைச்சில் இருந்து அனுமதி அளித்திருந்தார்கள். ஆனால் அம் - 8ம் குறுக்கு வீதி வடிகான் ஓரளவு செய்தாலும், அலவக்கரை வேலையை ஆரம்பிப்பதற்கு கூட மழைகாலத்தில் அச் சதுப்பு நிலம் இடம்தரவில்லை. நாம் அதை நீடித்து கேட்டு அமைச்சுக்கு கடிதம் எழுதியிருக்கின்றோம். ஆனால் இன்னும் அதற்கு பதில் வரவில்லை. மழை காலத்தில் ஏற்பட்ட சில அசௌகரியங்களினால் கௌரவ உறுப்பினர்கள் முன்வைத்த அவசர வேலைகள் சில செய்யப்பட்டன.

எமது நாட்டின் கௌரவ ஜனாதிபதி அவர்கள் சுற்றாடல் பாதுகாப்பதில் மிகவும் கவனம் செலுத்தி வருகின்றார். அதாவது இரானுவப் புலனாய்வு, பொலிஸ் புலனாய்வு உத்தியோகத்தர்கள் இப் பகுதிகளில் தகவல்களை சேர்த்து அனுப்பி அங்கிருந்து இவ்விடத்தில் இப்படியான ஒரு நிலை இருக்கின்றது இதை திருத்துங்கள் என்று கடிதம் மூலமாக படத்தோடு வருகின்றது. எனவே நாமும் வட்டார மட்டத்தில் இச் சட்டத்தை அமுல்படுத்துபவர்களாக மாற வேண்டும். சனிக்கிழமை டெங்கு நிகழ்வு வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டது. அதற்கு முக்கியமாக எமது செயலாளர், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், உத்தியோகத்தர்கள், நம்பிக்கையாளர் சபை, மஹல்லாப் பிரதிநிதிகள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், MOH Office உத்தியோகத்தர்கள் எல்லோரும் மிகவும் அர்ப்பணிப்போடு வேலை செய்து ஒரு வெற்றிகரமான நாளாக செயற்படுத்தினார்கள். ஆனால் இதை ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு கிழமையும் எமது தலமையில் இந் நடவடிக்கைகள் நடக்க வேண்டும். இதை நாம் தலைமைத்துவம் கொடுத்து நடத்தாவிட்டால் அது நமக்கு ஒரு பிரச்சினையாக வரும். இவ் வேலைகளுக்கு நாம் வழிகாட்டிகளாகவும், தலைவர்களாகவும் மாற வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

இவ் அரசினால் ஒவ்வொரு GN Division க்கும் சப்திரிகம திட்டத்தின் கீழ் 2 மில்லியன் ஒதுக்கீடு செய்ததைப் பற்றி உங்களுக்கு தெரியும். அத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு குறிச்சிகளிலும் மக்கள் மூலமாக இனங்காணப்பட்ட திட்டங்கள் அதில் நீங்களும் பங்கேற்றிருப்பீர்கள் என்ற நம்பிக்கை. அவ் முன்மொழிவுகள் வழமைக்கு மாறாக இத் திட்டத்தின் விதிமுறைகளுக்கு அமைய பிரதேச சபையின் தவிசாளர், பிரதேச செயலாளர், பிரதேச செயலகத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், பிரதேச சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் ஒன்றாக இருந்து ஒவ்வொரு விடயமாக பார்த்து ஆரம்பிக்கும் இடம், முடியும் இடம் என்ற வகையில் ஒவ்வொரு திட்டத்தையும் பார்த்து கையொப்பமிட்டு மாவட்ட செயலாளர் ஊடாக அமைச்சுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றது. இதன் பிரதி என்னிடம் இருக்கின்றது. உங்களுக்கு தேவைப்பட்டால் அதன் பிரதிகளை எடுத்து வைத்துக் கொள்ளலாம். ஏனென்றால் நான் அறிந்தமட்டில் இது செயற்படுத்தப்போவது பிரதேச சபை மூலமாகும். ஆனால் செய்பவர்களின் சிபார்சுகள் எப்படி வரும் என்று தெரியாது. ஆளும் கட்சி தவிசாளர்கள் இத் திட்டம் பிரதேச சபைகள் மூலமாக செயற்படுத்தப்பட வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்கள். நான் அறிந்தமட்டில் சப்திரிகம திட்டம் பிரதேச சபையினால்தான் செயற்படுத்தக்கூடிய சாத்தியப்பாடுகள் இருக்கின்றது.

அடுத்து முக்கியமான விடயம் என்னவென்றால் Budget பிரதி உங்களுக்கு தரப்பட்டிருக்கின்றது. இதை நாம் தயாரிக்கும் போது இவ் வருடத்தில் முக்கியமாக வரி வருமானத்தை மையமாக வைத்து தயாரிக்கப்பட்டிருக்கும் Budget ஐ நாம் வெற்றிகரமாக செயற்படுத்துவதானால் ஒவ்வொரு

மாதமும் எமது பகுதிகளில் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி வரிகளை செலுத்துவிக்க வேண்டும். எனவே அடுத்த கிழமை இவ் அறிவித்தல்கள் ஆரம்பிக்கும். 3ம் மாதம் மீளாய்வு செய்து சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமானால் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் நாம் தயங்கக்கூடாது. ஏனென்றால் 2019 ஆம் ஆண்டு வரை நாம் அறவிடும் வட்டாரங்களில் மொத்தமாக 19 மில்லியன் நிலுவையாக உள்ளது. இதை நாம் அறவிடுவோமானால் நிச்சயமாக 3ம் மாதத்திலேயே Budget யை மாற்றியமைக்கலாம். Budget இல் அபிவிருத்திக்குரிய தொகைகள் ஒதுக்கவில்லை. ஏனென்றால் வருமானம் போதாது. வருமானத்தை கூட்டினால் நிச்சயமாக அத் தொகைகளை அபிவிருத்திக்கு பயன்படுத்தலாம். ஏனென்றால் மற்றயதற்கு எல்லாம் Allocation செய்து விட்டோம். அவ் வட்டாரங்களில் உள்ள பட்டியல் அங்கத்தவர்கள் மட்டுமல்ல வரி எல்லைக்குள் இல்லாத வட்டாரங்களில் உள்ள அங்கத்தவர்களும் திண்மக் கழிவுப் பணத்தை மக்கள் செலுத்தினால் எமது சுமை குறையும் அதில் உங்களின் உதவிகளை நாடியவனாக, எனது உரையை முடித்து சபையின் அங்கீகாரங்களாக,

நிதி மற்றும் கொள்கை உருவாக்கல் கூட்டத்தின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதில் ஏதாவது கருத்துக்கள் கௌரவ உறுப்பினர்கள் முன்வைக்க விரும்பினால் கூறலாம். இக் குழுவின் அங்கத்துவம் உங்களுக்கு இருக்கின்றது இதற்கு அப்பால் பங்களிக்கக் கூடியவர்களின் பெயர்கள் சிபார்சு இருந்தால் அதை செய்யலாம். ஏனென்றால் அடுத்த கூட்டத்திற்கு அவர்களையும் அழைக்கலாம். அக் கூட்டத்திற்கு 20 பேரில் 7 பேர் வந்திருந்தார்கள். 7 பேரும் உண்மையாக ஆக்க பூர்வமான கருத்துக்களை முன்வைத்தார்கள். அதே போல் இதற்குள் இன்னும் உள்வாங்கக் கூடியவர்கள் இருந்தால் நீங்கள் முன்மொழிந்தால் அவர்களையும் வரவேற்கலாம்.

### தீர்மானம் - 04/23/02

சென்ற மாதம் 2019.12.02 தொடக்கம் 2019.12.31 வரையிலான செலவீனங்களும் மற்றும் கொடுப்பனவுகளுக்குமான செலவு விபரங்களுக்கு அனுமதி வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம் றியாஸ் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

2020.02.04 ஆந் திகதி சுதந்திர தின நிகழ்வை எவ்வாறு நடாத்தலாம் என்ற கருத்துக்களை உங்களிடம் இருந்து கேற்க விரும்புகின்றேன். சுதந்திர தினம் வழமையாக அப்துல் மஜீட் மண்டபத்தில் ஒரு வைபவம் வைத்து நடாத்துகின்றோம். இவ் வருடம் வித்தியாசமாக செய்ய வேண்டும். அரசாங்கம் இன்னும் ஒரு அறிவித்தல் செய்ததாக இல்லை.

### தீர்மானம் - 04/23/03

சுதந்திர தின நிகழ்வினை அரச சுற்றுநிரூபத்திற்கமைய நடாத்துவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஆர்.வளர்மதி |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

### தீர்மானம் - 04/23/04

மல்வத்தையில் புதிதாக ஆட்டிறைச்சிக் கடை வைப்பதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/23/05**

சபையில் கடமையாற்றும் நிரந்தர மற்றும் தற்காலிக ஊழியர்களின் 01.01.2020 தொடக்கம் 31.12.2020 வரை சம்பளம் மற்றும் அதனோடு தொடர்பான கொடுப்பனவுகளை வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/23/06**

வருமானப் பிரிவுக்கான ஜன்னல்களுக்கான திரைச் சீலை, மேசை, அலுமாரி என்பன கொள்வனவு செய்வதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம் றியாஸ் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/23/07**

PD – 1845 இலக்கமுடைய அலுவலக வாகனத்திற்கு 04 டயர்கள் மாற்றுவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி.எம்.சஹீல் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/23/08**

சபையின் மூலம் அவசரகால நிலமையின் கீழ் திருத்தம் செய்யப்பட்ட பின்வரும் வீதிகளுக்கான அனுமதி பெறுவதற்கான பிரேரணை.

1. தர்மன் வீதி, வீரமுனை
2. DS குறுக்கு வீதி, புளக் ஜே மேற்கு
3. கரடியர் வீதி, புளக் ஜே மேற்கு
4. அல் அக்சா குறுக்கு வீதி, மலையடிக்கிராமம்

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என். கோவிந்த சாமி |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

PSDG வழமைக்கு மாறாக இவ் வருடம் பாதைகள் கல்வெட்டுக்கள், Drainage இற்கு 16 Mn உம், Local Authority Service, Library, Market, Children Park, Cemetery Street Light System போன்றவற்றிற்கு 5Mn உம், Solid Waste Management இற்கு 6Mn உம், சமுதாய நீர் வினியோகத் திட்டத்திற்கு 3Mn உம் ஆகும்.

**தீர்மானம் - 04/23/09**

2020 ஆம் ஆண்டுக்கான கீழ்வரும் PSDG வேலைத் திட்டங்களுக்கான முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்கான பிரேரணை.

1. Construction of Sahibu Lane at Kallaraichal - 02 – 120M
2. Construction of Kallarichal Children Park Road at Kallaraichal - 02 – 120M
3. Construction of Drainage at Mishba Palli Road Kallaraichal -02 – 200M
4. Construction of Culvert with Road at Thennampillaikiramam Road Block “J” West – 02
5. Construction of Drainage at AM 16th Road Udanga - 02
6. Construction of Concreate Surface Road for Navalar School Cross lane at Walathappity
7. Construction of Kandiah Road at Malwattai - 01 – 100M
8. Construction of Culvert & Drainage at children Park Road Kaikattiyadi Junction Block “J” west - 02 – 70M
9. Construction of Savakkai Road at Veeramunai – 04 – 70M
10. Construction of water filtration plant at Malligaitivu, walathappity – 01.
11. Construction of Night soil treatment plant at compost yard compound veeramunai – 04
12. Construction of Boundary wall at slaughter house bio gas plant area
13. Construction of fencing for Ameer Ali Children Park at Tamil Division – 04
14. Construction of Toilet Block at Sennalkiramam (Library) building premises
15. Construction of Toilet Block at Hijra Public Market, Viliniyadi – 03
16. Construction of Boundary wall at Malwattai library

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ். நளீம் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

LDSP இற்குரிய பணம் 2Mn Account இற்குள் வந்துவிட்டது. கூட்டம் ஒன்று வைத்து சபையின் Limit எவ்வளவு என்று பாரத்து அப்படி ஒரு புறம்பான Bank Account திறப்பதற்குறிய முடிவுகள் எல்லாம் இன்று எடுக்கப்படும் என்று உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கூறினார். இக்கிழமைக்குள் அத் தகவல் வரும். முதல் கட்டமாக 7mn ரூபா தான் வருவதற்கு உள்ளது. அது வந்தவுடன் இக் கட்டத்திற்குறிய Lift பூட்டப்படும் நாம் எவ்வளவு விரைவாக செய்கிறோமோ அதற்கு ஏற்றது போல் மேலதிகமான Allocation வருவதற்குறிய சாத்தியம் உள்ளது. எமக்கு இலக்காக இருக்க வேண்டியது உடனடியாக LDSP வேலைகளை ஆரம்பித்து செய்வதாகும்.

முஹல்லா மஹல்லா மையவாடி மழைகாலத்தில் பெரும்பாலான ஜனாசாக்கள் அங்கு அடக்கம் செய்யப்படுகின்றது. அப் பரப்பில் வெளிச்சம் இல்லை. ஆனால் CEB மானிய முறையில் தூண்களை கொடுத்து நாட்டப்பட்டுள்ளது. எனவே நாம் அதற்கு சபை தீர்மானத்துடன் மின் விளக்குகள் பொருத்த வேண்டும். நான் நேற்று DS, பாராளுமன்ற உறுப்பினர், நம்பிக்கையாளர் சபை எல்லோரிடமும் கதைத்து அப் பிரதேசத்தின் நலனை கருதியும், பின்புலத்தையும் உள்வாங்கி மையவாடிக்குரிய பகுதியை பிரதேச சபைக்கு கையளிப்பதற்கு உத்தியோகபூர்வமாக நம்பிக்கையாளர் சபைக்கு கடிதம் எழுதியிருக்கின்றேன். அவ்வாறு செய்தால் அமைச்சுகள் மூலம் ஏனைய வேலைகளை செய்யலாம். உங்களுக்குத் தெரியும் அதன் பின்னனியை பற்றி ஏனென்றால் மஹல்லா நிருவாகத்தினர் மையவாடி பள்ளிவாசலுக்கு சொந்தமானது என்று நினைக்கின்றார்கள். நான் கூறினேன் ஊருக்கு சொந்தமானது. ஊருக்கு சொந்தமானது சபைக்கு கீழ் தான் வர வேண்டும். அவ்வாறு வருகின்ற போது தான் பிரதேச சபை சட்டத்தின் கீழ் அபிவிருத்தி வேலைகளை செய்யலாம். அந் நேக்குடன் தான் ஜனாசா மண்டபமும் கட்டப்பட்டது. தற்போது விளக்குகள் பொருத்துவதற்கு 225000 ஒரு Estimate வந்துள்ளது. அதை செலவளிப்பதற்கு உங்களின் அங்கீகாரத்தை கேட்கின்றேன்.

**தீர்மானம் - 04/23/10**
முஹல்லா மஹல்லா மையவாடியின் உள்ளக மின் கம்பியிட்டு மின்விளக்குகளை பொருத்துவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் எம். எஸ். சரிபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மின் விளக்கு தொடர்பாக கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் பைசால் காசிம் அவர்கள் 15 தூணுக்கும் அவரின் சொந்தப் பணத்தில் மின் இணைப்பை வழங்குவதற்கு முன்வந்துள்ளார் என்பதை இச் சபையில் அறியத்தருகின்றேன். இதை வேறு தேவைக்கு பயன்படுத்த வேண்டும் என்று நினைக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
சந்தோசமான செய்தி அது ஒரு ஸதகதுல் ஜாரியாவாக மாறும் என்று நினைக்கின்றேன்.

பழைய சந்தைகளை நாம் நல் எண்ணத்தோடு செய்தும் 1ம், 4ம் கடைகள் மட்டும் இயங்கி வருகின்றது. ஏனைய கடையறைகளை எடுத்தவர்கள் மூடிவிட்டார்கள். இதில் கேள்விகள் இருக்கின்றது. ஆனால் போட்டி வராமல் இறைச்சிக் கடைக்கு அடுத்ததாக கோழிக்கடையை திறந்தால் கோழி, இறைச்சி கடை ஒன்றாக இருக்கும். கோழிக்கடை பள்ளிவாசல் பக்கம் வருவதை விரும்பமாட்டார்கள். நீங்களும் யாரையும் சிபார்சு செய்வதென்றால் சிபார்சு செய்து அதனை ஆரம்பிக்க வேண்டும். ஏனைய கடைகளை ஒவ்வொன்றும் ஒவ்வொன்றாக பொருத்தமானவர்களுக்கு வழங்க வேண்டும்.

**தீர்மானம் - 04/23/11**
பழைய மார்க்கட் கடையறைகள் வாடகைக்குப் பெற்றவர்கள், வியாபார நடவடிக்கைகளை கைவிட்டதால் பொருத்தமான வியாபாரிகளை தெரிவு செய்து அவர்களுக்கு வாடகைக்கு கடைகளை வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
வீடுகளில் மாடு அறுத்தல், கள்ளமாடு அறுத்தல் தொடர்பாக தேசிய மட்டத்தில் செய்திகள் போகின்றது. ஏனென்றால் புலனாய்வினால் ஒவ்வொரு இடத்திலும் எலும்புகள் போடுவதனால் பிரச்சினைகள் ஏற்படுகின்றது. ஏன் இவ்வூரில் மடுவம் இருக்க உத்தியோக பூர்வமான இறைச்சிக் கடைகள் இருக்க யார் இந்த வேலைகளை செய்கின்றார்கள்? வீடுகளில் மாடு அறுப்பவர்கள் இங்கு காசு செலுத்தி அனுமதி எடுத்து விட்டு மாட்டை அறுத்து அதன் கழிவுகளை பாரம் கொடுக்காமல் பொது இடங்களில் கொண்டு வீசுகின்றார்கள். அதே நேரம் கள்ளமாடு அறுத்து பங்கு போடுகின்றார்கள். அறுப்பதற்கு அனுமதி கொடுப்பது நாம். அதனுடன் சேர்த்து அறுக்கின்ற மாடுகளின் கழிவுகளை பாரம் எடுப்பதற்கான கட்டணத்தைக் கூட்ட வேண்டும். அதாவது ஒரு மாடு அறுப்பதற்கு 1000 ரூபா செலுத்த வேண்டும். அதாவது 500ரூபா மாட்டுக்கும் , 500 ரூபா கழிவுகளை பாரம் எடுப்பதற்கும் மற்றும் கழிவுகளை பாரம் தராதவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கையும் எடுக்க வேண்டும்.

**தீர்மானம் - 04/23/12**

வீடுகளில் மத அனுஸ்டானங்களுக்கு அறுக்கப்படும் ஒரு மாட்டிற்கு ரூபா 500 உம், அதன் கழிவுகளை எமது வாகனம் மூலம் பெறுவதற்கு ரூபா 500 உம் அறவீடு செய்வதுடன், கழிவுகளை பொது இடங்களில் வீசுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்குமான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எல்.எம். ஜிப்ரி |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்வர் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, மாடு அறுப்பு தொடர்பாக பேசப்படுவதில் எனது கருத்து என்னவென்றால் முக்கியமாக வெள்ளிக்கிழமை தினத்தில் இறைச்சிக் கடைக்காரர்கள் மாடு அறுக்கின்ற இடத்திற்கு கொண்டு செல்லாமல் அவர்களது வீட்டில் அறுத்து கடைகளில் போடுகின்ற சம்பவங்களும் கேள்விப்படுகின்றோம். அதனையும் கருத்திற் கொண்டு நடைமுறைப்படுத்த வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

புது OIC வந்துள்ளார். அவர் மாற்று மதத்தை சேர்ந்தவர். இதில் கவனமாக அந்த நகர்வுகளைக் கொண்டு போக வேண்டும். ஆனால் நிச்சயமாக கௌரவ உறுப்பினர்கள் கூறியது போல் நடக்கின்றது. இதை உண்மையாக ஒவ்வொரு இறைச்சிக்கடையிலும் இருக்கும் மாமிசத்திலும் PHI இன் சீல் இருக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் எம்.ரீ.பௌசுள்ளாஹ் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, அட்டாளைச்சேனை பிரதேச சபைக்குட்பட்ட இறைச்சிக் கடைகளில் தனி இறைச்சி ஒரு கிலோ 650 ரூபாவுக்கு விற்பதற்கு ஆவண செய்துள்ளார்கள். அதே போல் எமது ஊரிலும் விலைகளை குறைப்பதற்கு ஏதாவது செய்யலாமா?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

இவ் விடயம் பற்றி பல முறை கதைத்திருக்கின்றோம். அதற்கு ஒரு குழுவையும் உருவாக்கி இருக்கின்றோம். இவ் ஊரில் எல்லாம் Demand and Supply எவ்வளவு கேள்வி இருக்கின்றதோ அவ்வளவிற்கு செய்யலாம். இவ்வூரின் Tender விலைகள் வேறு ஒரு பகுதிகளிலும் இல்லை. சம்மாந்துறை பிரதேச சபை இறைச்சிக் கடைகள் மூலம் எடுக்கின்ற வருமானம் வேறு ஒருவரும் எடுப்பதில்லை.

எமக்கு இருக்கின்ற மிகப்பெரிய பிரச்சினை என்னவென்றால் மாடு வருவது என்றால் பல கிராமங்களுக்குள்ளால் வர வேண்டும். கௌரவ உறுப்பினர் ஜிப்ரி அவர்களுக்கு நன்றாக தெரியும் அந்த செலவு அவ்வளவும் மாட்டின் விலையில் சேருகின்றது. சராசரியாக ஒவ்வொரு இறைச்சிக்கடையும் ஒரு நாளைக்கு ரூபா 5000 சபைக்கு கட்டுவதற்கு உழைக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எல்.எம். ஜிப்ரி அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, இரவு நேரங்களில் மடுவத்திற்கு மாடு வருகின்றது. ஆனால் அது எங்கிருந்து வருகின்றது என்றால் பகலில் வீரச்சோலையில் கட்டிப் போடப்பட்டு இரவில் வெள்ளாமை வயல்கள் ஊடாக மாடு வருகின்றது. அம் மாட்டிற்கு வைத்தியரின் சிபார்சு இல்லை. இவ்வாறான மாடுகள் ஒவ்வொரு கிழமையும் அறுக்கப்படுகின்றது. நான் அவதானித்திருக்கின்றேன் மாடுகள் மடுவத்திற்குள் தான் வருகின்றது. PHI, வைத்தியர்கள் 4 மணிக்கு முதல் வந்து பரிசோதிக்கின்றனர். ஆனால் அப்படி பரிசோதிக்கப்பட்டு சீல் வைக்கப்பட்ட மாடுகள் வெளியேற்றப்பட்டு ஏனைய மாடுகள் கொண்டு கட்டப்படுகின்றது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

அப்படியென்றால் நிச்சயமாக CCTV Camera பூட்ட வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மாடு அறுப்பு தொடர்பான விடயத்தில் கௌரவ உறுப்பினர் அஸ்வர் அவர்கள் கூறியது போல் குறிப்பாக வெள்ளிக்கிழமைகளில் மடுவம் தவிர்ந்த ஏனைய இடங்களில் மாடு அறுப்பதற்கு காரணம் வழங்கப்பட்டிருக்கின்ற நேரசுசி. நான் நினைக்கின்றேன் PHI அல்லது வைத்தியர் காலை 6 மணிக்கு பிறகு தான் மாடு அறுக்கும் மடுவத்திற்கு செல்கின்றார்கள். வெள்ளிக்கிழமை நாட்களில் 6 மணிக்கு பிறகு அம் மாட்டை பரிசீலனை செய்து அதன் பின்னர் மாடு அறுத்து உரிய இடத்திற்கு கொண்டு செல்கின்ற போது 9 மணியாகின்ற சூழ்நிலை இருக்கின்றது. அதன் பின்னர் அவ் இறைச்சிகள் விற்பனை செய்வதில் ஒரு கேள்விக்குறி இருக்கின்றது. வெள்ளிக் கிழமைகளில் நேரத்துடன் 6 மணிக்கு கடைகளுக்கு இறைச்சி கொண்டு வரவேண்டும் என்கின்ற விதிமுறை இறைச்சிக் கடைகளுக்கு பழக்கப்பட்டிருக்கின்றது. இது எமது ஊரின் நடைமுறை. எனவே வெள்ளிக் கிழமைகளில் மாடு அறுக்கின்ற நேரத்தை மேலதிக நேரமாக மாற்றி எடுப்பதற்கு ஒரு ஏற்பாடு செய்ய வேண்டும். அதே போல் மாடு அறுக்கும் உரிய இடத்தில் கண்கானிப்பு கமராவினை பூட்டுவதற்குரிய ஏற்பாடு மிக தீவிரமாக செய்ய வேண்டும். எமது சபையால் கடைகள் அனைத்திற்கும் கேள்விமனு கோரப்பட்டு கொடுப்பதுடன் குறிப்பாக அக் கடைகள் எமது பராமரிப்பில் இருக்கின்றது. ஆனால் இறைச்சியை விற்கும் இடத்தில் எந்தவிதமான சுகாதாரத் தன்மையும் இல்லை. ஏனென்றால் நாம் கேள்விமனு கோரி எமது சபைக்கு வருகின்ற வருமானத்தை எடுத்து சபையால் அந் நிதியை வேறு தேவைகளுக்கு பயன்படுத்தும் போது அவ் இடம் துப்பரவு இல்லாமல் இருப்பது பற்றி பல்வேறு கருத்து முறண்பாடுகள் ஏற்படுகின்றன. இறைச்சி விற்கப்படும் கடைகள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை சபையால் ஒரு முடிவு எடுக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் கே.எல். சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சென்ற சபையிலும் இதைப்பற்றி கதைக்கப்பட்டது. Entrance இல் இருக்கும் கடைகளை கட்டாயமாக இடமாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அது ஊர் Entrance இல்லை. மல்வத்தை 4 இற்கும், சம்மாந்துறைக்கும் எல்லை தான் அவ் இறைச்சிக்கடை ஆகும்.

**கௌரவ உறுப்பினர் எம். எஸ். சரிபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இறைச்சிக் கடைகளில் தராசுகளை கட்டாயம் பரிசீலனை செய்யப்பட வேண்டும். ஏனென்றால் தற்போது நான் வண்டு இறைச்சிக்கடையில் 1 கிலோ இறைச்சியை வாங்கி எனது வீட்டில் இருந்த தராசில் நிறுத்த போது 250g இல்லை. நான் உடனே அதை அனுப்பிய போது அது வேறு தராசில் நிறுத்து வந்தது. கீழுக்கு ஒரு தராசும், மேலுக்கு ஒரு தராசும் வைத்திருக்கின்றார்கள். அத் தராசுகளை கண்கானிக்க செல்லும் போது பிழையான தராசை மறைத்து சரியான தராசை வைக்கின்றார்கள். எனவே தராசுகளை நாம் கவனிக்க வேண்டும். இறைச்சிக் கடைகள் துப்பரவு இல்லாததில் மிகவும் மோசமாக இருப்பது வண்டுக் கடை ஆகும். அதனால் ஒரு வாய்க்கால் செல்கின்றது அதற்குள் எல்லா கழிவுகளையும் போடுகின்றார்கள். நான் அவர்களிடம் பல தடவை கூறியிருக்கின்றேன். ஆனால் அவர்கள் அதை கேட்காமல் போடுகின்றார்கள். எனவே இதில் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ. யூசுப் லெவ்வை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இறைச்சிக்கடை தொடர்பாக உண்மையிலே மருதமுனை ஊரில் நான் அவதானித்தேன். அவ் இறைச்சிக்கடைகள் மாபிள் பதித்து கண்ணாடி Fitting செய்து இலத்திரனியல் தராசு வைக்கப்பட்டுள்ளது. அவ்வாறான இறைச்சிக்கடைகள் போல் எமது ஊரிலும் உருவாக்குவதற்கு சபை ஊடாக கௌரவ தவிசாளர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் இறைச்சியின் விலை தொடர்பில் ஏனைய ஊர்களை ஒப்பிட்டு மக்களுக்கு நியாயமான விலையில் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்றால் அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் பொதுமக்கள் பாவிக்கின்ற சகல விதமான பொருட்களுக்கும் கட்டுப்பாடான விலைகளை

கொண்டுவந்து மக்களுக்கு நல்ல ஒரு ஆட்சியையும், நிர்வாகத்தையும் கொண்டுவர வேண்டும் என்ற நோக்கத்தோடு செயற்பட்டுக் கொண்டிருப்பதில் நாம் எல்லோரும் சந்தோசமடைகின்றோம். எனவே இறைச்சிக் கடை விவகாரத்திலாவது நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர்களின் கருத்துக்களை உள்வாங்கியவனாக, சம்மாந்துறையில் இறைச்சிக்கடைகள் நவீனமயப்படுத்த வேண்டும் என்று நீண்ட நாள் ஆரம்பித்த ஒரு விடயம். ஹிஜ்ரா சந்தை, பழைய சந்தை, சியாசந்தி கடைகள் ஓரளவு அந் நிலைக்கு வந்துள்ளது. ஆனால் இதில் எமக்கு சொந்தமான இடங்களில்தான் இத் திருத்தங்களை செய்யலாம். இதற்கு ஒரு விதிமுறை இருக்கின்றது ஆனால் அது நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. ஏனென்றால் Tender Condition போட்டும் நடைமுறையில் குறைபாடுகள் இருக்கின்றது. அதனை நிவர்த்தி செய்ய வேண்டும். PHI களும், எமது நிர்வாகமும் மிகவும் கவனமாக மேற்பார்வை செய்து அதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதில் எந்த ஒரு மாற்றுக் கருத்தும் இல்லை. நாம் இறைச்சிக் கடைகளுக்கு இறைச்சியை வைப்பதற்குரிய பாத்திரங்களை வழங்க வேண்டும்.

**தீர்மானம் - 04/23/13**
விலங்கு அறுமனை பாவனைக்கு Bone Cutter, இறைச்சிக் கடைகளுக்கு மானிய அடிப்படையில் வழங்க இலத்திரனியல் தராசு மற்றும் இறைச்சிக் கடைகளில் இறைச்சியை வைப்பதற்கான பாத்திரம், Meat Mince என்பவற்றை கொள்வனவு செய்வதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம் றியாஸ் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/23/14**
CCTV Camera இனை கொள்வனவு செய்து அதனை விலங்கு அறுமனையில் பொருத்துவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ். நளீம் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, பொருத்தமான ஒரு தினத்தை ஒதுக்கி கௌரவ தவிசாளர் அவர்களின் தலைமையில் கௌரவ உறுப்பினர்களும் இணைந்து களவிஜயம் மேற்கொண்டு நேரடியாக பரிசோதனை செய்ய வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஸ்தபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்களின் கருத்துக்கு உடன்பட்டது போல் களவிஜயத்திற்கு முன்னதாக வட்டாரம் என்று வருகின்ற போது சபை உறுப்பினர்களிடம் சேர்ந்து கடை உரிமையாளர்களுக்கு முன்னோடி ஒன்று கூடல் ஒன்று ஏற்படுத்தப்பட்டு அதில் இவ்வாறான நடைமுறைகள் மேற்கொள்ளப்படும் என்று மிகவும் தெளிவாக கூறியதன் பின்னரான களவிஜயம் பொருத்தமானதாக இருக்கும் என்று தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர் முஸ்தபா அவர்கள் கூறியது போல் ஒரு முன்னோடி கூட்டத்தை இந் நாளைக்குள் ஏற்பாடு செய்து அதன் பின்னர் கள விஜயம் செய்து சில கட்டுப்பாடுகளை கொண்டுவர வேண்டும்.

Purchasing இல் ஒரு மாற்றம் நடந்துள்ளது. அதாவது Purchase இற்கு ஒரு DO போடுபட்டு Purchasing ஐ Planning இற்கு கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. Purchasing ஐ என்னுடைய நேரடி பார்வையில் ஒவ்வொரு 03 மாதத்திற்கு ஒரு தரம் பொருட்கள் வாங்கப்படுதல் வேண்டும். ஏனென்றால் Stationary, சுகாதாரப் பொருட்கள், Electrical இது மூன்றும்தான் பெரியளவில் வாங்குகின்றோம்.

**தீர்மானம் - 04/23/15**
2020 ஆம் ஆண்டிற்குரிய சபைக்கு தேவையான நுகர்வுப் பொருட்கள், காகிதாதிகள், Toner, சவர்க்காரங்கள் போன்றவற்றை கொள்வனவு செய்வதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/23/16**
மல்வத்தை – 01 இல் உப அலுவலகத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள பழைய கட்டடம் தற்போது பாவனைக்கு உட்படுத்தாத நிலையில் இருப்பதால் அதனை உடைப்பதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/23/17**
LDSP மூலம் கிடைக்கப்பெறுகின்ற நிதியினைக் கொண்டு விளினியடி – 03 இல் அமைந்துள்ள சம்மாந்துறை பிரதேச சபையின் கட்டிடத்தில் Lift இயந்திரத்தினை பொருத்துதல், மற்றும் வீரமுனை – 01 இல் அலவக்கரை வீதியில் சிறுவர் பூங்கா ஒன்றை அமைத்தல் போன்றவற்றுக்கான உப கருத்திட்ட முன்மொழிவினை வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி.எம்.சஹீல் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் ஏ. யூசுப் லெவ்வை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அரசாங்கத்தின் செயற்திட்டத்தின் ஊடாக அரசாங்கம் இந் நாட்டை அபிவிருத்தி செய்யும் நோக்கோடு பல மில்லியன் நிதிகளை பயன்படுத்தி பாதைகள் இடப்பட்டிருக்கின்றது. அதனடிப்படையில் ஹிஜ்ரா 1ம் வீதி ஆரம்பிக்கும் இடத்திலும், மல் 1ம் வீதி ஆரம்பிக்கும் இடத்திலும் காலையில் பார்த்தால் குப்பைகள் கொட்டப்பட்டு அசிங்கப்படுத்தப்பட்டு காணப்படும். இது வேதனைக்குரிய விடயம் ஆகும். ஏனென்றால் சம்மாந்துறையின் நகரத்தை அண்டிய பிரதேசங்களாக இருப்பதாலும், பொதுமக்கள் கூடுதலாக அப்பாதைகளில் பயணிப்பதாலும்

இந் நிலை தொடர்ந்து காணப்படுகின்றது. அவ் இடத்தில் இருப்பவர்கள் குப்பைகள் போடுகின்றவர்களிடம் கதைத்தும் அவர்கள் கேட்பதாக இல்லை. எனவே இதற்கு சபை ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு,

மல் 1ம் வீதி எனது வீட்டுக்கு அருகாமையில் செல்கின்ற பாதை அதில் நான் எனது சொந்தப் பணத்தில் 2 நிழல் தரும் மரங்களை நட்டினேன். அது பல நாட்களாக இருந்தது. ஆனால் திடீர் என்று மரங்களின் தளைகள் வெட்டப்பட்டு இருந்தது. அது மிருகங்கள் சாப்பிடாத மரம் ஆகும். அதே நேரம் அரசாங்கத்தினால் பெயர்பலகைகள் இருக்கின்ற சந்தியிலும் குப்பைகளை கொண்டு போடுகின்றார்கள். நான் சிலரை இனங்கண்டிருக்கின்றேன். அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் சுற்றுச்சூழல் திட்டத்தில் மிகவும் கவனம் எடுத்திருக்கின்றார். அந் நடவடிக்கைகளுக்கு அமைவாக நான் பொலிசாரோடு இணைந்து அந் நபர்களை கண்டிப்பாக சட்டத்திற்கு முன் கொண்டு போவதற்கு சகல ஆயத்தங்களையும் செய்து வருகின்றேன். அதற்கு கௌரவ தவிசாளர் அவர்களும், எமது சபையின் செயலாளர் மற்றும் கௌரவ உறுப்பினர்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

சம்மாந்துறையில் இன்று இரவு நேரங்களில் செல்கின்ற போது சிறப்பான முறையில் ஒளியூட்டப்பட்டு சம்மாந்துறை ஒளியினால் அலங்கரிக்கப்பட்டிருப்பது சந்தோசமாக இருக்கின்றது. அவ் அடிப்படையில் நான் கேட்டுக் கொள்வது என்னவென்றால் பிரதான சுற்றுவட்டத்தையண்டி இருக்கின்ற உள்பாதைகளுக்கு அவ்வாறு மின்விளக்குகள் இடுவதால் பொதுமக்களுக்கு அசௌகரியம் இல்லாமல் இருக்கும் என்பது எனது கருத்து. அதனடிப்படையில் ஹிஜ்ரா 1ம் வீதி இருள்சூழ்ந்து காணப்படுகின்றது. இதற்கு முக்கிய காரணம் மரங்கள் வளர்ந்து பாதைகளை மூடியிருப்பதால் ஆகும். அவற்றை வெட்டினால் அப் பாதை ஓரளவு வெளிச்சமடையும். அப் பாதைகளில் பொருத்தப்பட்டுள்ள ஓர் இரு தெருலாம்புகள் கூட ஒளி வீசுவது தடைபட்டுள்ளது. எனவே அதனை சீர்செய்வதோடு அவ் வீதிகளுக்கு மேலதிக தெருலாம்புகளை பொருத்துவதற்கும் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் கே.எல். சிஹாமா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, சென்ற சபை கூட்டத்தில் CEB கம்பங்கள் நாட்டப்பட்டதற்கு அருகாமையில் ஒரு இடவு இருக்கின்றது. அதை சீமெந்து இட்டு நிரப்புவதற்கு இங்கு இருக்கின்ற நிர்வாகத்தவர்களிடம் பல தடவை கூறியும் அவ் வேலை இன்னும் நடக்கவில்லை. அத்துடன் Sliate பாதை பற்றி எல்லோருக்கும் தெரிந்த விடயம். அப்பாதையில் மழை காலத்தில் கால் வைக்க இயலாத நிலைமையில் கானப்படுவதோடு; அக் கம்பத்தில் காணப்படுகின்ற சகல மின் விளக்குகளும் இல்லாமல் போய் விட்டது. அதைப் பற்றியும் நிர்வாகத்தர்களிடம் கேட்டதற்கும் இன்னும் எந்த பதிலும் இல்லை திருத்த வேலைகளும் செய்யப்படவும் இல்லை. Sliate பாதைகளில் அதிகமான அரச கட்டடங்கள் இருக்கின்றது. அதற்கு கட்டாயம் வெளிச்சம் போட்டு கொடுக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல் 2017 இல் மாகாண சபையால் ஒரு Bus Halt வந்தது. Bus Halt விளக்கமாக வேறு Contract ஐ மாகாண சபையால் கொடுக்கப்பட்டிருந்தாலும் அவர்கள் சபைக்கு நீங்கள் இதை கண்காணியுங்கள் என்று ஒரு கடிதம் அனுப்பி இருந்தார்கள். ஆனால் அது தொடர்பாக தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், செயலாளரிடம் கதைத்தேன். செயலாளர் எனக்கு பதில் அளித்தார். ஆனால் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் ஒரு நேரம் கதைப்பார்கள் ஒரு நேரம் கதைக்கமாட்டார்கள். காரணம் என்ன என்று தெரியாது. அவர்கள் எங்களிடம் கதைக்கின்ற தொனியும் வித்தியாசமானது.

அப்துல் மஜீட் மண்டபம் தொடர்பாக, பாலர் பாடசாலைகளின் நிகழ்வுகள் செய்ய வேண்டும் என்றால் அம் மண்டபம் கவர்ச்சிகரமாக அலங்காரம் செய்யப்பட்டு இருக்க வேண்டும். அவ்வாறு செய்தால் அக் குழந்தைகள் அதனை விரும்பும். அவ் அலங்காரத்திற்கு எப்படியும் காலதாமதம் ஏற்படும். இதற்கு நேரம் கட்டாயமாக ஒதுக்கப்பட வேண்டும். கல்விகளுக்கு இம் மண்டபத்தை வழங்குவது என்றால் ஒரு குறிப்பிட்ட பணத்தை ஒதுக்க வேண்டும். நாமும் சபையால் ஒரு நிகழ்வு நடாத்தினோம். செயலாளர அவர்கள் அந் நிகழ்வு 2 மணித்தியாலயத்தினால் முடியும் என்று

கூறினார். ஆனால் அந் நிகழ்வு 2 மணித்தியாலயத்தினால் முடியவில்லை. பெரியவர்களுக்கே அந் நிகழ்வு முடியாவிட்டால் குழந்தைகளுக்கு குறிப்பிட்ட நேரத்திற்கு முடியுமா? நிச்சயமாக முடியாது. எனவே கல்வி நிகழ்வுகளுக்கு மண்டபத்திற்கு குறுகிய பணத்தை நிரந்தரமாக வழங்க வேண்டும். ஏனென்றால் எல்லா பாலர் பாடசாலைகளிலும் 30 இற்கு மேற்பட்ட பிள்ளைகள் இருக்கின்றார்கள். அவர்கள் Video, பரிசுகளுக்கு பணம் கொடுக்க வேண்டும். மண்டபத்திற்கு மட்டும் ரூபா 10000 அல்லது ரூபா 15000 செலவளிக்கும் அளவிற்கு அப் பாலர் பாடசாலை இருக்க மாட்டாது. எனவே இதையும் தயவு செய்து கவனம் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அத்துடன் கௌரவ உறுப்பினர்கள் இக் கூட்டத்திற்கு வரும் போது அல்லது வேறு தேவைகளுக்கு வெளியில் இருந்து வரும் போதும் கூட்டறிக்கைகளை கையில் தருவதையும் தவிர்த்துக் கொள்ளவேண்டும். இவை அனைத்திற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, எமது ஊழியர்களை குறைகூறுவதாக இல்லை. சந்தர்ப்ப சூழ்நிலை சில வேளை நாங்கள் கூறுகின்ற வேலைகளை நெறிப்படுத்த முடியாமல் இருக்கலாம். ஆனால் இவ் வேலைகளை மேற்பார்வை செய்கின்றவர்களின் அசமத்தனம் இருக்கின்றது அதனால் இவ் வேலைகள் பின்தங்கப்படுகின்றது. உதாரணமாக சம்மாந்துறை பிரதேச சபை, பிரதேச செயலகம், நம்பிக்கையாளர் சபை அனைத்து பொது நிறுவனங்கள் எல்லாம் இணைந்து டெங்கு ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வுகளை செய்த போது சென்னல் கிராமம் 2ம் பிரிவில் அமைந்துள்ள வைத்தியசாலையிலேயே நாங்கள் ஒரு சிரமதானத்தை மேற்கொண்டோம். அச் சிரமதான கழிவுகளை எடுப்பதற்காக 4 நாட்கள் சொல்லியும் எடுக்கப்படாமல் இருக்கின்றது. நேற்றும் இறுதியாக எமது தொழில்நுட்ப உத்தியோகத்தர் அவர்களும் மேற்பார்வையாளர்களிடம் கூறினார் அதுமட்டுமல்லாமல் என்னிடமும் நீங்களும் சொல்லுங்கள் என்று தொலைபேசி இலக்கத்தை தந்தார். நானும் கதைத்தேன் ஆனால் இதுவரையும் அது நடைபெறவில்லை. அவ் இடம் மிகவும் பெறுமதியான இடம் அதை பராமரிக்க வேண்டும் என்பதற்காக முன்னாள் சுகாதார இராஜாங்க அமைச்சர் பைசால் காசிம் அவர்களின் உதவியோடு அவ் இடத்தில் ஒரு வைத்தியசாலை கட்டுவதற்காக அவர் 15 மில்லியன் பணம் ஒதுக்கப்பட்டு டிசம்பர் மாதம் நடுப்பகுதியிலே அவ் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டது.

அக்கட்டடத்தை கொண்டு வருவதற்காக முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் மாஹிர் அவர்களும் அதற்கான சகல வழிமுறைகளையும் இதன் பிரகாரம் செய்யுங்கள் என்று என்னை விடவும் கூடுதலான முயற்சிகள் அவரால் இடம்பெற்றது. அவ்வாறான இடத்தில் முக்கியமான இக் காலகட்டத்தில் அவ் வேலைகள் செய்ய வேண்டும் என்கின்ற இடத்தில் கழிவுகளை எடுக்கவில்லை. அப் பிரதேசத்தில் எமது வாகனங்கள் செல்வதாக இருந்தால் இதைப்பற்றி கேட்க தேவையில்லை. குறைந்த பட்சம் வாரத்தில் ஒரு நாளாவது அப்பிரதேசங்களுக்கு வாகனங்களை அனுப்பி தாருங்கள் என்று இச் சபைக்கு வந்த காலத்தில் இருந்து கேட்டுக் கொள்கின்றேன். திண்மக்கழிவு தொடர்பாக பேசப்படுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் குறிப்பாக என்னுடைய வட்டாரத்தில் இருக்கின்ற மக்கள் தெளிவாக இருக்கின்றார்கள் வரிப்பணத்தை செலுத்தி இத் திண்மக்கழிவகற்றல் சேவையில் நாங்களும் இணைந்து கொள்ள வேண்டும். எனவே மிக விரைவில் செய்து தரவேண்டும் என்று மக்கள் சார்பில் கௌரவ தவிசாளர் அவர்களை கேட்டுக் கொள்கின்றேன்.

அண்மையில் ஏற்பட்ட மழை அனர்த்தத்தினால் ஏற்கனவே பாதிக்கப்பட்டிருந்த சென்னல் கிராமத்தில் உள்ள புளியடி வீதி பாதிக்கப்பட்டு மக்கள் நடந்து செல்ல முடியாத ஒரு நிலை அவ் வீதியிலே இருக்கின்றது. எனவே அவ் வீதியை செப்பனிடுவதாக இருந்தால் மிகக் கூடுதலான பணம் தேவைப்படும். அதனை எமது சபையினால் செய்ய முடியாது என்பதும் எனக்கு தெரியும். இருந்தாலும் முதல் கட்டமாக மக்கள் பாவனைக்கு கிரவல் மண் போட்டாவது அப் பாதையினை ஓர் அளவு சீர் திருத்த வேண்டும். என்னுடைய சிந்தனையில் அதை இலகுவாக செய்ய வேண்டிய வழிமுறை இருக்கின்றது. இதை செய்வதற்கு கௌரவ தவிசாளர் அவர்களும் அங்கீகாரம் வழங்கினால் அதை செய்யலாம். அதாவது அவ் வீதிக்கு அருகில் இருக்கின்ற அப்ரார்

பள்ளிவாசலுக்கு சொந்தமான இடத்திலே எமக்கு தேவையான மலை மண்ணை எடுத்துக் கொள்ளலாம்.

அம் மண்ணை எடுப்பதற்காக எமது சபையினுடைய வாகனங்களையும் அதே போன்று வெளியில் இருந்து ஒரு எஸ்கவேட்டர் இயந்திரத்தை ஹயர் பண்ண வேண்டிய தேவையும் இருக்கின்றது. ஏனென்றால் எமது JCB ஐ கொண்டு அவ்வேலையை செய்ய முடியாது. அவ் இயந்திரத்தினை குறிப்பிட்ட மணித்தியாலயங்களுக்கு ஹயர் செய்து எமது வாகன வசதிகளையும், முடியுமாக இருந்தால் இன்னும் சில வாகனங்களையும் ஹயர் செய்து அப் பிரதேச மக்களோடும், என்னால் முடியுமான பங்களிப்பையும் செய்கின்றேன். அவ் வீதியை ஓரளவு மக்கள் பாவனைக்காக செய்துதர வேண்டும் என்று கௌரவ தவிசாளர் அவர்களை கேட்டுக் கொள்கின்றேன்.

சென்னல் கிராமம் - 02ம் பிரிவிற்கும், புளக் ஜே - 02ம் பிரிவிற்கும் இடைப்பட்ட S வாய்க்காலினுடைய வீதியில் இரவு நேரங்களில் செல்லுகின்ற போது இருள் சூழ்ந்து இருப்பதால் மிகவும் சிரமமாக இருக்கின்றது. மக்கள் குடியிருப்பு இல்லாத காரணத்தினால் மின் விளக்குகளை பொருத்துவதற்கான மின் கம்பங்களும் இல்லை. ஆனால் பிரதான போக்குவரத்து பாதை ஏறத்தாள 850M ஆகும். எனவே சூரிய சக்தி மூலமாவது இதற்குரிய வெளிச்சங்களை முடியுமாக இருந்தால் PSDG திட்டத்திலாவது அதனை செய்து தருமாறு கேட்டு எனது உரையை முடித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எஸ். நிலுவ்பா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சம்மாந்துறை பிரதேசத்திலே கிராம சேவகர் பிரிவு – 03 இல் பாதைகள் செய்திருக்கின்றார்கள். ஆனால் நீர் ஓடுவதற்குரிய வசதி இல்லாமல் இருக்கின்றது. இது மாரிகாலம் என்பதால் அப் பாதையில் செல்வதனால் பல அசௌகரியமான நிலை ஏற்படுகின்றது. அப்பாதைக்கு சபையினூடாக வடிகான் அமைப்பதற்குரிய வசதிகளை செய்து தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம். றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கடந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைவாக நாம் எடுத்த தீர்மானங்களை அடுத்தடுத்த கூட்டங்களில் அதன் முன்னேற்றம் பற்றி சொல்வதாக பேசிஇருந்தோம். அது நிகழ்ச்சி நிரலிலும் வரவேண்டும் அத்துடன் கூட்டத்திலும் கூறினால் சிறப்பாக இருக்கும்.

**கௌரவ உறுப்பினர் ஏ. யூசுப் லெவ்வை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் நளீம் அவர்களது புளியடி வீதி தொடர்பாக நான் மேலும் ஒரு கருத்தை கூறலாம் என்று நினைக்கின்றேன். இரு மருங்கிலும் இருக்கின்ற நிலப்பரப்பு உயரமாக இருக்கின்றது. அப் பாதையை செப்பனிட வேண்டுமாயின் அதற்கு முதல் பௌசி மாவத்தையில் இருந்து இடது பக்கமாக வடிகான் அமைப்பொன்று புளியடி சந்தியை தாண்டியாவது செல்ல வேண்டும். அவ் வடிகானை உருவாக்கியதன் பிற்பாடு அப் பாதையை தேவையான அடிப்படையில் அதை சீர் செய்ய முடியும் என்பது எனது கருத்து.

**கௌரவ உறுப்பினர் கே.எம். இன்பவதி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்கள் கூறியது போல் கடந்த சிறுவர்களுக்கான விடுகை விழா நடாத்தினோம். அவ் விடுகை விழாவில் சில குறைபாடுகளை கூற விரும்புகின்றேன். அதாவது அவ் விழாவில் பௌத்த கலாசாரம், இஸ்லாமிய கலாசாரம் முன்னுரிமைப்படுத்தப்பட்டது. ஆனால் இந்து கலாசாரமான இந்து நிகழ்வு நடைபெறவில்லை. தமிழ் முஸ்லிம் என்று ஒற்றுமையாக இருக்க வேண்டிய காலத்தில் சிறுவர்களின் மனதில் கட்டாயமாக கலாசாரமான விடயங்களை ஏற்படுத்த வேண்டும். ஆசிரியர்களுக்கு அவ்வாறு செய்ய முடிய இயலாது என்றால் எங்களால் அந் நிகழ்வை செய்துத தரமுடியும் என்று கூறுவதோடு எதிர்வரும் நிகழ்வுகளில் இதை இணைத்துக்கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எம். எஸ். சரிபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மலையடிக் கிராமம் - 04 இல் அமைந்துள்ள வடிகானின் கீழ் மூடி இடுவது பற்றி கதைத்துள்ளேன். அதை நடை பாதையாக மக்கள் பயன்படுத்துவதால் பிள்ளைகள் பாடசாலை செல்வதற்கு சிரமமாக இருக்கின்றது. அதற்கு ஒரு மூடி இடுவதற்கு சிறிய நிதியை ஒதுக்கி வழங்குமாறும் கேட்டுக் கொள்கின்றேன். மேலும் 10 வீட்டுத் திட்டத்தின் சந்தை தொடர்பாக பல முன்மொழிவுகளை செய்தேன். ஆனால் இதுவரைக்கும் அது நடைமுறைக்கு கொண்டுவரவில்லை. அத்துடன் S24 வாய்க்கால் நீர்பாசனத் திணைக்களத்திற்கு சொந்தமானது என்பதால் நீர்ப்பாசன பொறியியலாளரிடம் பல தடவை கூறினேன். அவர்களும் சுத்தப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. சில நேரம் குப்பைகள் அதற்குள் கிடக்கும் போது கழிவகற்றும் ஊழியர்களிடம் கூறினால் ஒரு சில ஊழியர்கள் வடிகானை துப்பரவு செய்யும் ஊழியர்கள் வருவார்கள் என்று அதனை விட்டுவிடுகின்றார்கள். நான் எத்தனையோ தடவை அதற்குள் இறங்கி அவற்றை எடுத்து பாதைகளில் வைத்திருக்கின்றேன். அவ் வாய்க்கால் அப் பிரதேச மக்களால் அல்லாமல் தூரஇடமிருந்து வருபவர்களால் தான் அசுத்தப்படுவது கூடுதலாக நடைமுறையில் உள்ளது.

பாலக்கர்ர சந்தியால் நான் வந்து கொண்டிருக்கும் போது 2 பேர் எலும்பு பேக்கை எடுத்து வந்து போட்டார்கள். நான் எனது வாகனத்தை திருப்பி சென்று கூப்பிட்ட போது சைக்கிளை வேகமாக இழுத்து சென்றுவிட்டார்கள். நானும் சிறிது தூரம் சென்றேன். அவர் மாவடிப்பள்ளியை சேர்ந்தவரும் அவரைப்பற்றி விசாரித்த போது அவர் அவ் இறைச்சிக்கடைக்கு சொந்தமானவர். இவர்களை நாம் நம்பிக்கையாளர் சபை ஊடாக இனங்கண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். வீட்டிலே மாடு அறுத்து பங்கு போடுபவர்கள் சபைக்கு வந்து ஸதகா, உழ்ஹியா என்று அனுமதி எடுக்கின்றார்கள். சுகாதார வைத்திய அதிகாரி உட்பட்ட சுகாதார பரிசோதக உத்தியோகத்தர்கள் 5 மணிக்கு அவ் இடத்திற்கு செல்கின்றார்கள். அவர்கள் சென்று சீல் வைத்த இறைச்சியா என்று பார்த்தால் வீட்டில் இருந்து இறைச்சி வருவதையும் என்னால் அவதானிக்க முடிந்தது. இதை சொன்னால் உத்தியோகத்தர்கள் யார் என்று சொல்லிக் கொடுத்து எங்களது உறுப்பினர்களுக்குள்ளே இன்னார்தான் சொல்லிக் கொடுத்தவர் என்று தெரிவுகாணக் கூடியதாக இடம்பெற்றுவருகின்றது. இது தவிர்க்கப்பட வேண்டும். ஏனென்றால் நாம் ஒரு வேலையை திருத்தமாக செய்ய வேண்டும் என்றால் ஒன்றுபட்டு செய்ய வேண்டும். ஒருவரை ஒருவர் காட்டிக் கொடுத்து அதில் நலன்பெற வேண்டும் என்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். எமது ஊரை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்பதிலும் சுத்தமான சூழலை உருவாக்க வேண்டும் என்பதையும் கேட்டுக் கொள்கின்றேன்.

மலையடி கிராமத்தில் 4ம் பிரிவு, 3ம் பிரிவு சந்திக்கும் முக்கோணம் ஒன்று இருக்கின்றது. அவ் இடம் காடாக இருக்கின்றது. அவ் இடத்தில் இருப்பவர்கள் அதனை துப்பரவு செய்கின்றார்கள் இல்லை. மக்கள் அதனால் செல்வது மிகவும் சிரமமாக இருக்கின்றது. அதற்கு LED மின்விளக்குகள் பொருத்தினால் நல்லது என்று நினைக்கின்றேன். எனவே வாய்க்கால் துப்பரவு தொடர்பாகவும் நீர்பாசன திணைக்களத்தோடு தொடர்பு கொண்டு அதற்கான நடவடிக்கையும் எடுக்க வேண்டும் என்று கௌரவ தவிசாளர் அவர்களை கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர் எல்லோரினது கருத்துக்களை உள்வாங்கியவனாக, அபிவிருத்தி வேலைகள் முன்மொழியும் போது கௌரவ உறுப்பினர்கள் எல்லோருக்கும் Budget இன் பிரதிகள் தரப்பட்டிருக்கின்றது. அதைப் பார்த்தால் இவ் வருடத்திற்குரிய Budget எவ்வளவு ஒதுக்கி இருக்கின்றது என்று தெரியும். வடிகான், பாதைகள் அமைப்பதற்கு நாம் போதியளவு நிதி ஒதுக்கீடு செய்யவில்லை. உங்களுக்கு தெரியும் சப்பிரிகம திட்டத்தில் 20 இலட்சம் வந்துள்ளது. இதன் பின்னர் 30 இலட்சம் வரப்போகின்றது. இதற்குள் இவ்வாறான விடயங்களை 10 இலட்சத்தை 10

வட்டாரத்திற்கும் செய்ய வேண்டும். அதை அவசரப் பணமாக வைத்திருக்க வேண்டுமே தவிர பாரிய அபிவிருத்தி செய்யக்கூடியதாக இல்லை. இத் திட்டங்களை முன்மொழிவதற்கு சபை ஊடாக

முன்மொழிகின்ற போது அதற்கு மேலிடம் வழங்கப்படுகின்றது. நாம் இயலுமான அளவு அவ்வாறான திட்டங்களை உள்வாங்க முயற்சி எடுக்க வேண்டும். நிச்சயமாக இவ் அரசாங்கம் பிரதேச சபைகளின் அபிவிருத்திக்கு எதிர்காலத்தில் மேலதிகமாக வழங்கலாம் என்ற நம்பிக்கை இருக்கின்றது.

திண்மக்கழிவு அகற்றல் இச் சபைக்குரிய மிகப்பெரிய சவால் ஆகும். எமக்கு இருக்கின்ற வளங்களுடன் திருப்திகரமான ஒரு சேவையை செய்கின்றோம். மேலதிகமாக செய்வதற்குரிய நடவடிக்கைகளை முதல் 4 மாதத்திற்குள் எடுப்போம். சிலநேரம் உங்களின் அனுமதிகளை கேட்கலாம் அதாவது கடன் அடிப்படையில் இன்னும் 2 உழவு இயந்திரங்கள் எடுத்து கௌரவ உறுப்பினர்கள் கூறுகின்ற பிரதேசங்களில் ஒரு கிழமையில் ஒரு தடவையாவது அதனை செய்வதற்கு; தற்போது எம்மிடம் வளம் இல்லை. அத் திட்டத்திற்கு கீழ்தான் கொண்டு வரலாம். சிலநேரம் அரசாங்கம் இதற்குரியவைகளை தரலாம். கௌரவ உறுப்பினர் யூசுப் லெப்பை அவர்கள் கூறியது போல் யார் இதை செய்கின்றார்கள் என்று இனங்கண்டால் அவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு செய்தால்தான் எல்லோரும் திருந்துவார்கள். பொதுப்பொறுப்பு இவ்வூரில் இல்லை. வடிகானுக்குள் குப்பை இருந்தால் அதை எடுத்து வீதியில் வைக்க வேண்டும் என்று இல்லை. அதை சபையிடம் சொல்லி துப்பரவு செய்யவேண்டும் என்று எமது ஊர் இருக்கின்றது.

இவ் வருடத்தில் மின்விளக்குகள் தொடர்பாக நான் பொறுப்பு எடுக்காமல் கௌரவ உறுப்பினர்களுக்குள் ஒரு குழுவை உருவாக்கி செய்ய வேண்டும். என்னை குறைகூறாமல் ஒரு குழுவை உருவாக்கி முடிவுகளை எடுங்கள் அதற்கு நான் தடையாக இருக்க மாட்டேன்.

புளியடி பாதையில் இருக்கின்ற பிரச்சினை என்னவென்றால் அப்ரார் பள்ளிவாசல் பள்ளத்தில் இருந்து வரும் நீர் பாதையால் செல்லுகின்றது. சப்பிரிகம திட்டத்தின் கீழ் அதற்குரிய வேலைகள் முன்மொழியப்பட்டுள்ளது. அதனால் வருகின்ற நீர் ஒழுங்குபடுத்தப்பட்டு வடிகானுக்குள் செலுத்தப்படுமானால் இப் பிரச்சினை தீரும். இதற்கு தற்காலிகமாக முன்டுக்கல்களை எடுத்து போட்டு சீர்படுத்த வேண்டும். மண்போட்டால் அடுத்த மழைக்கு அம் மண் இருக்காது. எனவே கல்லை போட்டு சீர்செய்தால் அடுத்த கட்டத்திற்கு உதவியாக இருக்கும்.

கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்கள் கூறிய விடயம் உடனடியாக CEB க்கு எழுதப்பட்டு நானும் Contracter இடம் அவ் இடைவெளியை நிரப்புவதற்கு கதைத்தோம். Sliate வீதி கட்டாயம் செய்யவேண்டும். Bus Halt கட்டப்படுகின்றது. இதில் உள்ள பிரச்சினை என்னவென்றால் Bus Halt இற்குரிய பணம் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டு இருந்தால் உடனடியாக செய்து முடித்திருப்போம். Award செய்த Transport Authority, எமக்கு Supervision. இது மட்டும்தான் இதற்குள் இருக்கின்ற பிரச்சினை ஆகும்.

அப்துல் மஜீட் மண்டபம் தொடர்பாக சபை தீர்மானித்தால் கல்வி நிறுவனங்களுக்கு சலுகை அடிப்படையில் கொடுக்க வேண்டும் என்றால் அதை செய்யலாம். ஏனென்றால் Audit Querry வருவதால் அதற்கு சபை தீர்மானம் இருக்க வேண்டும். முதல் மதரசாக்களுக்கு இலவசமாக கொடுத்தோம். ஆனால் அச் சலுகை நீங்கள் கொடுக்க இயலாது என்று Audit Querry ஆக வந்தது. தற்போது எமது சபையில் 2ம் மாடியில் Partition நடக்கின்றது. அதை ஒரு Auditorium ஆக மாற்றி அதை Workshop அல்லது வேறு கூட்ட நிகழ்வுகளுக்கு பாவிக்கலாம். ஏனென்றால் வருமானத்திற்குரியது அப்துல் மஜீட் மண்டபம், ஜனாதிபதி விளையாட்டுக் கட்டிடத் தொகுதி ஆகும். இவைகளுக்கு குறைந்தளவு Rate தான் எடுக்கின்றோம்.

கௌரவ உறுப்பினர் இன்பவதி அவர்கள் கூறிய விடயம் அதாவது சம்மாந்துறை பிரதேச சபைக்கு கீழ் இயங்குகின்ற 4 பாடசாலைகளும் 100 வீதம் இஸ்லாமிய மாணவர்கள் உள்ள இடம். ஆனால் கௌரவ உறுப்பினர் கூறிய கருத்து முக்கியமானது. ஏனென்றால் சகல மதங்களும் பிள்ளைகள் மனதில் அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எஸ். நிலுவ்பா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கடந்த மாதம் மக்களுக்கு பாதுகாப்பு தரக்கூடிய விதத்தில் பிரதேச சபை ஊழியர்கள் சேர்ந்து தியோட்டரடியிலுள்ள மரக் கிளைகளை அகற்றினார்கள். முடியுமானவரை அம் மரத்தை முற்றாக அகற்ற வேண்டும். அது பாதுகாப்பற்றதாக இருக்கின்றது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
Forest Department இற்கு எழுதியிருக்கின்றோம். மழைகாலம் என்பதால் செய்ய இயலாமல் போய்விட்டது. இம் மாதத்திற்குள் அதை செய்யலாம் என்று கூறி சபையின் அமர்வினை இனிதே முடித்துக் கொள்கின்றேன்.

AM.முஹம்மட் நௌசாட்
தவிசாளர்
சம்மாந்துறை பிரதேச சபை.

AM.முஹம்மட் நௌசாட்
தவிசாளர்
சம்மாந்துறை பிரதேச சபை.

***2020.01.07 Sammanthurai  Pradeshiya Sabha -04/23***

*2020.01.07 Sammanthurai  Pradeshiya Sabha -04/23*